# அறபு சினிமாவில் நபி (ஸல்) அவர்களை உருவகப்படுத்தல்: முஸ்தபா அக்காதின் அர்ரிஸாலா திரைப்படத்தை துணையாகக் கொண்ட ஆய்வு

# The embodiment of the Prophet in Arabic Cinema A Special Reference with Mustapha Akkad's Movie "The Message"

H.L. Meera Mohideen
PhD Research Scholar, Dept. of Arabic, Jamal Mohamed College, Affiliated to Bharathidasan University, Tiruchirappalli, India
hlmmohideen2018@gmail.com

## ஆய்வுச் சுருக்கம் (ABSTRACT)

சினிமா ஓர் ஆற்றுப்படுத்துகைக் கலை. அது வீரியமும் வெகுஜன செல்வாக்கும் கொண்டது. அறேபிய இலக்கியத்தில் சினிமாவுக்கு தனித்துவமான இடமுண்டு. அறேபிய சினிமா என்பதன் மூலம் அறபு நாடுகளில் காணப்படும் சினிமாசார் தொழிற்பாடு கருதப்படுகின்றது. இலங்கைச் சூழலில் அண்மைக்கலாமாக உலக சினிமாக்கள் தொடர்பான கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அறபு சினிமா பற்றிய அறிமுகம் அரிதாகவே காணப்படுகின்றது. இது தவிர, அறபு சினிமாவில் இஸ்லாமிய நம்பிக்கையுடன் தொடர்புபட்ட மரபுசார்ந்த அம்சங்களை சுதந்திரமாக காட்சிப்படுத்த முடியாதுள்ளது. குறிப்பாக நபிமார்கள், நபித்தோழர்கள் போன்ற முக்கியஸ்தர்களை உருவகப்படுத்தி காட்சிப்படுத்த இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. இந்தப்பின்னணியில், இலங்கையில் அறபு சினிமாத்தளத்தினை அறிமுகப்படுத்தி அது தொடர்பான கருத்தாடலை கல்விப்புலத்தில் ஆரம்பிப்பதனூடாக அறேபிய சினிமா எதிர்கொள்ளும் சமயம் சார் பிரச்சினைகளை வெளிக்கொணரவும் முடியம். இதற்காக, இயக்குனரும் தயாரிப்பாளருமான முஸ்தபா அக்காதின் திரைப்படம் அர்ரிஸாலா திரைப்படத்தின் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. ஆய்வு நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக விவரண மற்றும் பகுப்பாய்வியல் முறைகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளுடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைள், பத்திரிகைகள் மற்றும் இணையம் போன்றவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அறேபிய சினிமாவின் வளர்ச்சி இன்று அறபு நாடுகளை அதிகளவில் பாதிக்கின்றது. அது தனக்கேயுரிய தனித்துவமான பண்புகளுடன் மேற்கத்தைய சினிமாவுக்கு நிகராகவும் அதேவேளை உள்ளடக்கத்தில் தனித்துவத்துடனும் முன்னேறியுள்ளது. சினிமாவின் மூலம், தமது கலாசார, நாகரிக அம்சங்களை வெளிப்படுத்த அறேபிய இயக்குனர்கள் தவறவில்லை. அவர்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் மிகச் சிறந்த படைப்புக்களை தந்துள்ளனர். அனுமதி வரையறுக்கப்பட்ட நிலையிலும் நபிகள் நாயகம் பற்றிய திரைக்கதையை தொழிநுட்ப யுக்திகளைக் கையாண்டு முஸ்தபா அக்காத் படமாக்கியுள்ளார். திரையிலல்ல, பார்வையாளனை நிஜக் கதைக்குள் கொண்டு செல்லும் ஆற்றலை இப்படம் கொண்டிருக்கின்றது. ஆயினும், வரலாற்று நம்பகத்தன்மையை அவரால் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. அறேபிய இலக்கியத்தின் மிகப்பலமானதொரு

விடிவம் என்ற வகையில் இது தொடர்பான பரந்த ஆய்வுடன் கூடிய விழிப்புணர்வினை அறபு மொழி கற்பிக்கும் நிறுவனங்கள், கல்விக் கூடங்கள் எதிர்காலத்தில் மாணவர் மத்தியில் ஏற்படுத்தி திறனாய்வினை வலுவூட்டும் கலைத்திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் மாற்று சினிமா தொடர்பான வழிகாட்டல் மற்றும் பயிற்சிகளை வழங்க வேண்டுமென்றும் இவ்வாய்வு பிரேரிக்கின்றது.

**முதன்மைச் சொற்கள் (Keywords)**

அறபு சினிமா, நபி (ஸல்), உருவகப்படுத்தல், அர்ரிஸாலா, முஸ்தபா அக்காத்

## ஆய்வு அறிமுகம் (INTRODUCTION)

“சினிமா என்பது படங்களை நகர்த்தும் கலை. கதைகளைச் சொல்லும் மற்றும் யதார்த்தத்தை வெளிப்படுத்தும் ஒரு காட்சி ஊடகம். 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் உருவாக்கப்பட்ட சினிமா, உலகின் மிக சமீபத்திய கலை வடிவம். அது, இதுவரை உலகின் மிகவும் சிக்கலான, கூட்டு முயற்சிமிக்கதான, விலையுயர்ந்த கலை வெளிப்பாடாகும்.”[214]

சினிமா ஓர் ஆற்றுப்படுத்துகைக் கலை. அது வீரியமும் வெகுஜன செல்வாக்கும் கொண்டது. பல எழுத்தாக்கங்களும் சொற்பொழிவுகளும் சொல்ல முடியாத விடங்களை ஒன்றரை, இரண்டு மணித்தியாலங்களில் இலகுவாகவும் இரசனையுடனும் சொல்லிட முடியும். சினிமாவானது ஒலி, ஒளி விடிவங்களில் இணைந்திருப்பதே அதன் வினைத்திறனுக்குக் காரணமாகும். அதனையும் தாண்டி சினிமாவின் வெற்றி இரகசியம் கதை சொல்லலும் காட்சிப்படுத்தலும் ஆகும்.

ஒரு சமூகத்தின் குரலாக ஒலித்து அதன் வாழ்வின் குறுக்குவெட்டு முகத்தை உலகளவில் கொண்டு செல்வதில் சினிமாவுக்கு தனித்திறமையுண்டு. அடி மட்ட சமூகத்தினதும், மேல்மட்ட சமூகத்தினதும் வாழ்வியலை சமனிலையாகப் பேசும் மொழி சினிமாவிடமே உள்ளது. சினிமா மொழி, இடம், காலம் தாண்டி இலகுவில் புரிந்து கொள்ளும் நிலையைத் தோற்றுவிக்கின்றது. இதற்கு அது ஒரு Picture Language ஆக இருப்பதே காரணமாகும்.

உலக சினிமாவில் வரலாற்றுப் படங்களுக்கு தனியிடமுண்டு. இது இரசைமிக்கதாகவும் பார்வையாளர்களைக் வேகமாக கவரும் தன்மை கொண்டதாகவும் உள்ளது. இந்த வரலாற்றுக் கதைப்படங்கள் ஹொலிவூட் சினிமாவில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மேற்கத்தைய தாக்கம் கொண்ட அறேபிய சினிமாவில் இத்தகு படங்கள் அதிகளவில் மக்கள் வரவேற்பைப் பெறுகின்றன. ஹொலிவூட் சினிமா பின்னணி கொண்ட முஸ்தபா அக்காத் 1979 இல் தனது முதலாவது இஸ்லாமிய அறேபிய வரலாற்றுப் படத்தை The Message என்ற பெயரில் வெளியிட்டார். இவ்வாய்வு, அறேபிய சினிமா எதிர் கொள்ளும் மிக முக்கிய பிரச்சினையான உருவகப்படுத்தல் பற்றியும் முஸ்தபா அக்காதின் அர்ரிஸாலா திரைப்படத்தில்

[214] Accessed on 12.10.2020 at http://www.elementsofcinema.com/general/what-is-cinema.html

நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை காட்சிப்படுத்தப்பட்டுள்ள பாங்கு பற்றியும் கவனம் செலுத்துகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை (PROBLEM)**

சினிமா என்பது ஓர் ஆற்றுகைக் கலை. அதன் வீரியம் மனித மனங்களை மிகவும் தாண்டிச் செல்லக்கூடியது. அது இடத்தால், காலத்தால், மொழியால் மட்டிட முடியாத வெகுசன மொழி. இலங்கைச் சூழலில் அண்மைக்கலாமாக உலக சினிமாக்கள் தொடர்பான கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அறபு சினிமா பற்றிய அறிமுகம் அரிதாகவே காணப்படுகின்றது. இது தவிர, அறபு சினிமாவில் இஸ்லாமிய நம்பிக்கையுடன் தொடர்புபட்ட மரபுசார்ந்த அம்சங்களை சுதந்திரமாக காட்சிப்படுத்த முடியாதுள்ளது. அதற்கு சினிமாவின் வெளிப்படைத்தன்மையும் தொழில்நுட்பத்தில் முழுக்க முழுக்க சார்ந்துள்ளமையும் முக்கிய காரணமாகும். குறிப்பாக நபிமார்கள், நபித்தோழர்கள் போன்ற முக்கியஸ்தர்களை உருவகப்படுத்தி காட்சிப்படுத்த இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. இது இஸ்லாமிய வரலாற்றினை சினிமா என்ற வெகுஜன ஊடகத்தின் மூலம் பதிவு செய்ய முடியாதளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இஸ்லாமிய சமய வரையறைக்குள் நின்று திரைப்படம் ஒன்றினை தயாரிப்பதற்கான மாற்றுத் தேவைகள் தற்காலத்தில் உணரப்பட்டுள்ளன. இந்த பணியை இயக்குனரும் தயாரிப்பாளருமான முஸ்தபா அக்காத் மேற்கொண்ட போதும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு அவரது படங்கள் தடை செய்யப்பட்டன. குறிப்பாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பில் தாயரிக்கப்பட்ட அக்காதின் அர்ரிஸாலா திரைப்படம் தடைசெய்யப்பட்டது.

**ஆய்வு நோக்கம் (OBJECTIVES)**

இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

- இலங்கையில் அறபு சினிமாத்தளத்தினை அறிமுகப்படுத்தலும் அது தொடர்பான கருத்தாடலை கல்விப்புலத்தில் ஆரம்பித்தலும்.
- அறேபிய சினிமா எதிர்கொள்ளும் சமயம்சார் பிரச்சினைகளை வெளிக்கொணர்தல்.
- இயக்குனரும் தயாரிப்பாளருமான முஸ்தபா அக்காதின் திரைப்படச் செயற்பாடுகளை அறிமுகம் செய்து அவரது அர்ரிஸாலா திரைப்படத்தின் மூலம் அறேபிய சினிமா எதிர்கொள்ளும் சவால்களுக்கான தீர்வுகளை பெற முனைதல்.

**இலக்கிய மீளாய்வு (LITERARY REVIEW)**

பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் இலக்கிய மீளாய்வுக்காக எடுக்கப்பட்டன. இந்தேனேசியா ஜகர்த்தாவில் அமைந்துள்ள ஜாமிஆ ஷரீப் ஹிதாயதுல்லாஹ் பல்கழக மாணவர் இமாலியா ராஹன்தி (2010) என்பவரால் செய்யப்பட்ட SS கல்விப்பட்ட ஆய்வான **முஸ்தபா அக்காதின் அர்ரிஸாலா திரைப்படம் - உள்ளடக்க ஆக்கபூர்வத்தன்மை**

**தொடர்பான ஆய்வு**, அப்துர்ரஹ்மான் பின் ச.்.து அத்தஸ்ரி (2012) என்ற அறிஞரினால் தொகுக்கப்பட்ட **ஹுக்முத் தம்தீலிஸ் ஸஹாபா வல் அன்பியா** என்ற ஆய்வுத் தொகுப்பு, கலாநிதி அப்துல் காதிர் முஹம்மத் அஹ்மத் கமர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட மஜ்மவுல் பிக்ஹில் இஸ்லாமியின் ஜித்தா சர்வதேச மாநாட்டு **தம்ஸீலு அத்வாரில் அன்பியா வஸ்ஸஹாபா பில் அப்லாமி வல்முஸல்ஸலாத்** என்ற அறிக்கை, நெதர்லாந்து, உட்ரெக்ட் பல்கலைக்கழக பேராசிரியர் பிரீக். எல். பேக்கர் என்பவரின் **The Image of Muhammad in the Message, the First and only Feature Film about the Prophet of Islam** (Research Gate: Vol. 17, No. 1, 77–92, January 2006) ஆய்வு, பேட்சிக் கீடிங் (2014) Cinematography ஆகியவை முக்கியமானவை. இவைதவிர, இணைய பக்கங்கள், கட்டுரைகள் என்பனவும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.

## ஆய்வு முறையியல் (METHODOLOGY)

ஆய்வு நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக விவரண மற்றும் பகுப்பாய்வியல் முறைகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளுடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையம் போன்றவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (RESULTS AND DISCUSSION)

### 01) அறேபிய சினிமா அறிமுகம்

அறேபிய சினிமா என்பதன் மூலம் அறபு நாடுகளில் காணப்படும் சினிமாசார் தொழிற்பாடு கருதப்படுகின்றது. இது, கலாசார ரீதியில் வேறுபட்ட, பல அறேபிய நாடுகளில் காணப்படுவதனால் இதற்கு குறித்த ஒரு வரைவிலக்கணத்தை வழங்க முடியாதுள்ளது. அறேபிய சினிமாவைப் பொருத்தவரை அது தொடக்கத்தில் மேற்குலக சினிமாப் பாணியை ஒத்ததாகவே காணப்பட்டது. ஆயினும் காலப்போக்கில் அறேபிய நாடுகளில் அவற்றின் தன்மைக்கேற்ப பல மாற்றங்கள் கலை ரீதியாவும் வணிக ரீதியாகவும் இடம்பெறத் தொடங்கின. எகிப்து, லெபனான், சிரியா, ஈராக், குவைத், அல்ஜீரியா, மொரோக்கோ, டியூனிசியா போன்ற நாடுகளில் அதிகளவில் சினிமா செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அறேபிய நாடுகளுக்கு மத்தியில் எகிப்தே சினிமாத் துறையில் முன்னணியில் உள்ளது.

ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்துவமான சிறப்புப்பண்புகளும் பிரத்தியேக வணிகத் தன்மையும் உள்ளது. வட ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் திரைப்படத் தயாரிப்பு 1960 வரை மந்தமாகவே இருந்தது. ஆயினும் 1970 களின் ஆரம்பம் முதல் அரச உதவிகளை அறபு சினிமா தயாரிப்பாளர்கள் பெறத் தொடங்கினர்.

‘‘சுதந்திரக் காலத்துடன் அறேபிய சினிமா வேகமாக வேரூன்றத் தொடங்கியது. அரசசார் நிறுவனங்களின் நிதி உதவியுடன் அதிகளவிலான படங்கள் தயாரிக்கப்பட்டு தேசியளவில்

பரிமாணம் பெற்றது. இந்தப் படங்கள் சுதந்திரம் உள்ளிட்ட சமூக, பொருளாதார, அரசியல் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுக்க உதவியது. இதன் மூலம், எகிப்தில், நீடித்த சினிமா துறை ஒன்றினை உருவாக்க முடிந்தது. அதேநேரம், ஏனைய நாடுகளில், குறைந்தளவிலான பொருளாதார அனுசரணை காரணமாக அவ்வப்போது ஒரு சில முழு நீளப் படங்களே (Feature Films) தயாரிக்கப்பட்டன. இதனால் அறேபிய சினிமா எகிப்திய திரைப்படங்களினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டன. குறிப்பாகச் சொல்வதானால், முக்கால்வாசிப் படங்கள் எகிப்தியப் படங்களாகவே இருந்தன. இதற்குப் புறம்பாக, அறபு மொழிப்பிராந்தியத்தில் லெபனான் திரைப்படங்களே முழு தேசிய அறேபியச் சினிமாவாக கருதப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.''[215]

எகிப்திய மற்றும் லெபனானிய சினிமாக்கள் தமக்கென்று நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டிருந்த போதும், சுதந்திரக் காலம் வரை அதிகமான அறேபிய தேசங்கள் தமக்கான சினிமா படைப்புக்களைக் காணவில்லை. சில நாடுகள் இன்றும் கூட இத்தகைய முயற்சியில் இறங்கவில்லை. அத்துடன், பஹ்ரைன். சவூதி, சூடான், ஐக்கிய அறபு இராச்சியம் போன்ற நாடுகள், சினிமா செயற்பாடுகளாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் குறும்படச் செயற்பாடுகளில் சுருங்கிக் காணப்படுகின்றன.

அல்ஜீரியா, லெபனான். மொரோக்கோ. பலஸ்தீன், சிரியா, டியூனிசியா போன்ற நாடுகளில் திரைப்பட தயாரிப்பு தொடர்பான ஆர்வம் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. முன்னரை விடவும் தற்போது திரைப்பட விழாக்கள், திறனாய்வு அமர்வுகளில் இந்நாட்டவர்கள் அதிகளவில் பங்குபற்றுவதைக் காண முடிகின்றது.

அறேபிய திரைப்படங்கள் அரசியல், காலனித்துவம், பாரம்பரியம், நவீனத்துவம் மற்றும் சமூகத் தடைகள் தொடர்பாகவே அதிகம் கவனம் செலுத்துகின்றன. அத்துடன், மேற்கத்தைய பாணியிலிருந்து விலகிச் செல்வதைக் காண முடிகின்றது. ''கடந்த பத்தாண்டுகளைக் கூர்ந்து பார்க்கையில் அரபு சினிமா கதைக்களம் சார்ந்த படைப்புக் கவனத்தையும் தாண்டி, தொழில்நுட்ப ரீதியிலும் உகந்த மாற்றம் கண்டிருக்கின்றன. ஐரோப்பிய நவீன வகை சினிமாவில் இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கும் காட்சியணுகல் (Cinematic Approach) பின்னணியில்தான் இதன் பரிணமிப்பை நாம் அவதானிக்கவியலும். எனினும், ஐரோப்பிய சினிமாவின் கதாபூர்வமான உள்ளடக்கக் காரணிகளின் தாக்கத்திலிருந்து அவை விலகியே உள்ளன என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.''[216] இங்கு மற்றுமொரு அம்சத்தைக் குறிப்பிடவேண்டும். காலனித்துவம் திரைப்படங்களை மட்டுமல்ல திரையரங்குகளையும் கட்டுப்படுத்தியதாக கூறப்படுகின்றது. இதுதவிர, பெண்களும் அறேபிய சினிமாவில்

[215] முகைதீன் ஹஸன், (2019) ''அறேபிய இலக்கியத்தில் கதை கூறலும் சினிமாவும்'', மருதோன்றி - பிரதேச கலாசார விழா சிறப்பு மலர் - 08, ஓட்டமவடி: கலாசாரப்பேரவை, கோறளைப்பற்று மேற்கு, பக்: 69

[٢١٦] விஸ்வாமித்திரன் (2008), ''டுனீஷிய சினிமா'' குருதியில் படிந்த மானுடம் சமகால அரசியல் திரைப்படங்கள், சென்னை: தோழமை வெளியீடு, முதற்பதிப்பு, பக்: 102

பங்காற்றியுள்ளனர். அவர்கள் தமது திறன்களை சினிமாவின் பல்துறைகளிலும் வெளிப்படுத்தியுள்ளனர்.

**02) அறேபிய சினிமாவில் உருவகப்படுத்தல்**

அறேபிய சினிமா எதிர் கொள்ளும் மிக முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாக உருவகப்படுத்தல் கருதப்படுகின்றது. அறபு மொழி சர்வதேச மொழி என்பதைத் தாண்டி அது இஸ்லாத்தின் மொழி என்பதனாலும் இஸ்லாமிய அடிப்படை மூலதாரங்கள் அம்மொழியில் உள்ளமையாலும் இஸ்லாமிய வரலாற்றுப் பகுதியை சுதந்திரமாக காட்சிப்படுத்த முடியாத ஒரு நிலை ஓர் அறேபிய திரைப்பட இயக்குனருக்கு ஏற்படுகின்றது. ஏனெனில், வரலாற்றுடன் தொடர்புடைய குறிப்பாக மிக முக்கிய நபர்களை உருவகப்படுத்தி காட்சிப்படுத்துவது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

இஸ்லாமிய சட்டவியலின் அடிப்படையில் பொதுவாக நபிமார்கள், குறிப்பாக நபி (ஸல்) அவர்கள், நபியவர்களது மனைவிமார், நபித்தோழர்கள், தாபியீன்கள், தபஉத்தாபியீன்கள் என்று ஸலபஸ்ஸாலிஹுஃன்களில் எவரையும் உருவகப்படுத்த முடியாது. அதற்குரிய அனுமதியும் இல்லை. இது தொடர்பில் பெரும்பான்மையான அறிஞர்கள் ஒத்த கருத்திலேயே உள்ளனர்.

“இந்த திரைப்படங்கள் மற்றும் இஸ்லாமிய தொடர்கள் என்று சொல்லப்படுபவை எல்லாமே வீண் கேளிக்கை, பார்ப்போரை கவர்தல், பொருளாதார சம்பாத்தியம் ஆகிய பொது நோக்கங்களின் அடிப்படையில் அமைந்தவை. அத்துடன், பிழையாக விளக்கமளித்து சலுகைகளை அனுமதிகளாக்கியதனால் அதில் பல சொல் மற்றும் செயல்சார்ந்த பாவங்கள் உள்ளன. சுமார் 1960 க்கு முன்னால் புதிதாக தோற்றம் பெற்ற உருவகப்படுத்தல் செயற்பாடுகளில் நபிமார்கள் மற்றும் நபித்தோழர்களை உருவகப்படுத்தல் உள்ளடங்கியிருந்தது. அது இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட ஹராமான காரியம் என எல்லா அறிஞர்களும் ஏகோபித்த தீர்மானத்துக்கு வந்தனர்.”[217]

“இஸ்லாமிய அமைப்புக்களின் கூட்டமைப்பு - ஹி. 1390 துல்ஹஜ் மாதம் மக்காவில் நடைபெற்ற அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானம்: நபி (ஸல்) அவர்களை மற்றும் நபித்தோழர்களை எந்த தோற்றத்திலும் அல்லது அமைப்பிலும் உருவகப்படுத்தி மேற்கொள்ளப்படும் சினிமா நெறியாள்கை முயற்சிக்கு இம்மாநாடு கடுமையான கண்டனத்தைக் தெரிவிக்கிறது. இத்தகைய முயற்சிகளை அதன் தொடக்கத்திலேயே தடைசெய்து விடுமாறு இஸ்லாமிய நாடுகளை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.”[218]

[217] அப்துர்ரஹ்மான் பின் ஃ.து அத்தஸ்ரி, ஹுக்முத் தம்தீலிஸ் ஸஹாபா வல் அன்பியா - முன்னுரை, (2012) முதல் பதிப்பு, பக்: 5, www.alukah.net
[218] மேலது பக்: 16

“ஹி. 1391 ஷ.்.பான் 1 தொடக்கம் 13 வரை காலப்பகுதியில் நடைபெற்ற 13வது அமர்வில் உலக இஸ்லாமிய லீக்கின் உயர்சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்: வரையறுத்த நிலையில் நபி (ஸல்) அவர்களையும் அவர்களது இடம், செயல்கள், ஏனைய விவகாரங்களை கெமரா கொண்டு சுட்டிக்காட்டுவதன் மூலம் நபி (ஸல்) அவர்களை உருவகப்படுத்தி திரைப்படம் நெறிப்படுத்துவது ஹராம் என்று எல்லா அறிஞர்களதும் ஏகோபித்த தீர்மானம் என்று ராபிதாவின் உயர்சபை தீர்மானிக்கிறது. மேலும், சில நபித்தோழர்களை பல நிலைகளிலும் பல்வேறுபட்ட காட்சிகளிலும் உருவகப்படுத்துவது எல்லா அறிஞர்களதும் ஏகோபித்த தீர்மானத்தின் படி அது ஹராமானது என்றும் ராபிதா தீர்மானிக்கிறது.”[219]

அதேவேளை வேறு சில இஸ்லாமிய அறிஞர்கள் வறையறுத்த நிலையில் ஸஹாபாக்களை உருவகப்படுத்த முடியும் என்ற தீர்ப்பினை வழங்கியுள்ளனர். மஜ்மவுல் பிக்ஹில் இஸ்லாமி தனது 21வது மாநாட்டில் இவ்விடயத் தொடர்பில் வெளியிட்ட தீர்மான அறிக்கையில் ஸஹாபாக்களை உருவகப்படுத்துவது தொடர்பில் மூன்று விதமான கருத்தோட்டங்கள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதில் முதலாவது பொதுவாக நபித்தோழர்களை உருவகப்படுத்துவது ஹராம் என்றும் இரண்டாவது பொதுவாக ஆகுமானது என்றும் மூன்றாவது சிலரை உருவகப்படுத்துவது தடைசெய்யப்படும் அதேவேளை ஏனையோரை உருவகப்படுத்தலாம் என்றும் கருத்துக்கள் உள்ளதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“சஹாபாக்களை உருவகப்படுத்தல்: இரு தொடர்பாக தற்கால அறிஞர்களிடையே மூன்று கருத்துக்கள் உள்ளன. முதலாவது கருத்து: பொதுவாக தடைசெய்யப்படுதல்.....இரண்டாவது கருத்து: பொதுவாக ஆகுமாக்கபடுதல். இக்கருத்தினை ஷீஆக்கள் கொண்டுள்ளனர். பைஸல் மௌலவி தனது பத்வாக்களில் ஒன்றில் ஷீஆக்கள் வாயிலாக இக்கருத்தினை கொண்டு வந்திருப்பதாக கூறப்படுகின்றது. யூசுப் அல்கர்ழாவி மற்றும் சல்மான் அல்அவ்தா போன்றவர்கள் இக்கருத்தையே கொண்டுள்ளனர். உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் பற்றி தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சி நாடகத்தின் காட்சிகள் மற்றும் திரைக்கதையினை ஆய்வுக்குட்படுத்தி குறித்த தொடரினை தயாரிக்க இவ்விருவரும் அனுமதியளித்தனர். அது பிரபல்யமான ஒன்று. மூன்றாவது கருத்து: சில நபித்தோழர்களை உருவகப்படுத்துவது ஹராமானது. ஏனையோரை உருவகப்படுத்தலாம். குலபாஉர்ராஷிதூன், அஹ்லுல் பைத், சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் சொல்லப்பட்ட அஷரதுல் முபஷ்ஷரா ஆகியோரை உருவகப்படுத்தப்படுத்தலாகாது. இக்கருத்தில் சில அறிஞர்கள் உள்ளனர்.”[220]

[219] மேலது பக்: 17

[220] கலாநிதி அப்துல் காதிர் முஹம்மத் அஹ்மத் கமர், தம்ஸீலு அத்வாரில் அன்பியா வஸ்ஸஹாபா பில் அப்லாமி வல்முஸல்ஸலாத், சர்வதேச மாநாட்டு அறிக்கை, ஜித்தா: மஜ்மவுல் பிக்ஹில் இஸ்லாமி, பக்: 17-19 www.noor-book.com

‘‘இத்தகைய அனுமதியை கூட நபித்தோழர்களின் சிறப்பிற்கும், அவர்கள் மீது அஹ்லுஸ்ஸுன்னாக்கள் கொண்டுள்ள அன்பிற்கும் கலக்கத்தை ஏற்படுத்தாத வகையிலும் பொய்யான இட்டுக்கட்டப்பட்ட செய்திகளை தவிர்த்து அவர்களது நிஜமான வாழ்க்கைச் சரித்திரத்திற்கு முரண்படாமலும் முஸ்லிம் சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தாத வகையிலும் தயாரிக்கப்பட வேண்டும் என்ற மிகக் கடுமையான வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடனேயே அறிஞர்கள் வழங்குகின்றனர்.’’[221]

### 03) அர்ரிஸாலா திரைப்பட இயக்கநர் முஸ்தபா அக்காத்

‘‘மத்திய சிரியாவின் அலெப்போ நகரில் வறுமையான குடும்பத்தில் 1935 ஆம் ஆண்டு அக்காத் பிறந்தார். ஆரம்ப, இடைநிலைக் கல்வியை அங்கு பெற்றார். பதினெட்டு வயதையடைந்த போதே சினிமாயில் இயக்குநராக வேண்டும் என்ற கனவு அவருள் ஏற்பட்டது.’’[222]

1954 இல் அமேரிக்கா சென்று கலிர்போனியா மாநிலத்தில் உள்ள UCLA இல் திரைப்பட இயக்கம் தொடர்பாகக் கற்றார். 1962 இல் ஹொலிவூட் சினிமாவில் ஓர் இயக்குநராக, தயாரிப்பாளராக தனது சினிமா வாழ்வை ஆரம்பித்தார். 1976 இல் தனது ‘‘அர்ரிஸாலா’’ என்ற முதலாவது அறேபிய திரைப்படத்தின் மூலம் அறேபிய சினிமாவில் காலடி எடுத்து வைத்தார்.

‘‘அவர் கலிபோர்னியாவுக்குச் சென்றார். அங்கு அவர் கலிபோர்னியப் பல்கலைக்கழகத்தில் படித்தார் மற்றும் அவரது சக ஊழியர்கள் அனைவரையும் விட சிறந்து விளங்கினார். இந்த பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற பட்டியலில் அவரது பெயர் இன்னும் உள்ளது. படிக்கும் போது திரைப்படங்களை இயக்குவதில் பயிற்சி பெற்றார். ‘கஸ்ருல் ஹம்ரா’ எனும் படம் தயாரித்தவுடன், அவர் பல்கலைக்கழகத்தில் முதல் பரிசை வென்றார். பட்டம் பெற்ற பிறகு அவர் சர்வதேச இயக்குனர் ஆல்பிரட் ஹிட்ச்காக் என்பவரின் உதவியாளராகப் பணியாற்றினார். அவரிடம் சினிமா தொடர்பான பயிற்சியையும் சிறந்த அனுபவத்தைப் பெற்றார். மேலும் இது பல ஹாலோவீன் திரைப்படங்களைத் தயாரிப்பதில் அவருக்கு உதவியது.’’[223]

---

[221]கலாநிதி ஷௌகி இப்ராஹீம் அல்லாம், பத்வா செயலகம், தாருல் இப்தா அல்மிஸ்ரிய்யா, எகிப்து: https://www.dar-alifta.org/ar/ViewFatwa.aspx?ID=13236&LangID=1

[222]அமாலியா ராஹன்தி, முஸ்தபா அக்காதின் அர்ரிஸாலா திரைப்படம் - உள்ளடக்க ஆக்கபூர்வத்தன்மை தொடர்பான ஆய்வு, (2010), சரீப் ஹிதாயத்துல்லாஹ் அரச பல்கலைக்கழகம், ஜகர்த்தா, இந்தோனேசியா. பக். 43

[223] விகிபீடியா, முஸ்தபா அக்காத் (08.10.2020 அன்று கீழ்வரும் இணைப்பில் பெறப்பட்டது.)

https://ar.wikipedia.org/wiki/%D9%85%D8%B5%D8%B7%D9%81%D9%89_%D8%A7%D9%84%D8%B9%D9%82%D8%A7%D8%AF

முஸ்தபா அக்காதின் குடும்ப வாழ்வைப் பொருத்தவரை "அவர் இரு முறை திருமணங்களை செய்தார். பாத்ரீஷியா என்ற கலைத்துறைப் பட்டதாரியான அமேரிக்கப் பெண் ஒருவரை திருமணம் செய்து பின்னர் அவரை பிரிந்து விட்டார். பின், ஸஹல் அஷிய் என்ற பெண்ணை திருமணம் செய்தார். பாத்ரீஷா மூலம் ரீமா, தாரிக், மாலிக் என்ற மூன்று பிள்ளைகளையும் ஸஹல் அஷிய் மூலம் ஸைத் என்ற மகனையும் பெற்றார். இவர், முஸ்லிம் சுன்னி சமயப் பின்னணியைக் கொண்டவர்."[224]

அறேபியர் வாழ்வு முறையையும் சமய மரபையும் மிகத் தெளிவாக மேற்குலகுக்கு கொண்டு செல்வதில் அக்காதின் பணி மகத்தானது. அவரது, நபிகள் நாயகம் பற்றிய "அர்ரிஸாலா" மற்றும் லிபியாவின் சுதந்திரப் போராளி உமர் அல்முக்தார் பற்றிய "அஸதுஸ் ஸஹ்ரா" ஆகிய இரண்டு படங்களும் மிக முக்கியமானவை. இவைதவிர, பல ஹாலோவீன் தொடர்களை இயக்கியிருந்தார். 2005 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாள் ஜோர்தானில் இடம்பெற்ற பயங்கரவாத குண்டுத்தாக்குதலில் தனது மகள் ரீமாவுடன் படுகொலை செய்யப்பட்டார்.

### 03) அர்ரிஸாலா திரைப்படம்

இவ்வாய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முஸ்தபா அக்காதின் அர்ரிஸாலா திரைப்படம் அறபு மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இப்படத்தின் திரைக்கதை நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையான ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரழி) அவர்களை மையப்படுத்தியே எழுதப்பட்டுள்ளது. இப்பாத்திரத்தினை அறபுப் பிரதியில் எகிப்தியரான அப்துல்லாஹ் கைஸ் என்ற பிரபல நடிகரும் ஆங்கிலப் பிரதியில் அண்டனி கொய்ன் என்ற அமேரிக்க திரைப்பட நடிகரும் நடித்திருந்தனர். அதேபோல் இப்படத்தின் மற்றுமொரு பிரதான கதாபாத்திரமான ஹிந்த் பின்த் உத்பா என்ற பாத்திரத்தில் அறபு மற்றும் ஆங்கில பிரதிகளில் முறையே சிரியாவைச் சேர்ந்த முனா வாசிப் மற்றும் கிரேக்கத்தைச் சேர்ந்த ஐரின் பபஸூம் தோன்றினர். இப்படத் தயாரிப்புச் செலவாக சுமார் 10 மில்லியன் அமேரிக்க டொலர்கள் மதிப்பிடப்பட்டன. இப்படம் வணிக ரீதியில் பாரிய வெற்றியை அக்காதுக்கு கொடுத்தது. இதன் ஆங்கிலப் பிரதி மட்டுமே செலவை விட பத்து மடங்கு இலாபத்தைக் குவித்தது. 12 இற்கும் மேற்பட்ட மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குவைத், மொரோக்கோ, லிபியா ஆகிய நாடுகள் இப்படத்திற்கு நிதியுதவி செய்தன. "சில பிரபல்யமான சினிமா சஞ்சிகைகள் இப்படம்

[224]அரகீக், முஸ்தபா அக்காத் யார்? (08.10.2020 அன்று கீழ்வரும் இணைப்பில் பெறப்பட்டது.)
https://www.arageek.com/bio/moustapha-akkad

குறித்து விமர்சனங்கள் செய்திருந்த போதிலும் கல்விப்புலத்தின் கவனத்தை அது பெறவில்லை'' என்பது குறிப்பிடத்தக்கது.[225]

கி.பி. 721 இல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் குறைஷி வம்சத்தில் பிறந்தார்கள். தனது 63 வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்கள். ஆயினும் அவர்கள் தனது 40 வயதில் இஸ்லாத்தைப் போதிக்க ஆரம்பித்தார்கள். அது மக்காவில் ஆரம்பிக்கப்பட்ட பணி. நபியாக சுமார் 23 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து இஸ்லாத்தைப் போதித்தார்கள். இந்த நபித்துவக் காலப்பகுதியை மையமாக் கொண்டே திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

***கதைச்சுருக்கம்:*** இத்திரைப்படம் மக்காவில் நபி (ஸல்) அவர்களுக்கு வஹி கிடைக்கப்பட்ட சம்பவத்துடன் ஆரம்பிக்கிறது. அவர் தன்னைச் சுற்றியிருப்பவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்க ஆரம்பிக்கிறார். அன்றைய மக்கத்து தலைவர்கள் அவர் அழைத்த விடயத்தை வெறுக்கின்றனர். அவரை யாராவது பின்பற்றினால் அவர் அதனை விட்டுவிட வேண்டுமென்று தண்டிக்கின்றனர். இத்தகைய தலைவர்களுள் முதன்மையானவர்கள் அபூஜஹ்ல் மற்றும் அபூலஹப் ஆவர். பிலால், அம்மார், யாசிர், சுமையா (ரழி) போன்றோர் இவர்களால் வேதனைப்படுத்தப்பட்டு சிலர் கொலையும் செய்யப்படுகின்றனர். முஸ்லிம்கள் தமது பிரச்சாரத்தை பகிரங்கப்படுத்திய போது மக்கத்து வீரர்களுள் ஒருவரான ஹம்ஸா இஸ்லாத்தை ஏற்கிறார். மக்காவாசிகளின் கொடுமையும் முஸ்லிம்களை இஸ்லாத்தை விட்டுவிட நிர்பந்தமும் அதிகரித்த போது நபியவர்கள் மக்களை ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் செல்லுமாறு கட்டளையிடுகிறார்கள். மாத்திரமின்றி, சமூகப் பகிஷ்கரிப்பிலும் ஈடுபடுகின்றனர். நபியவர்கள் தனக்கு மிகுந்த உறுதுணையாக இருந்த அபூதாலிப் அவர்கள் மரணித்ததும் ஸைத் (ரழி) அவர்களுடன் தாயிப் நகருக்குச் செல்கின்றார்கள். ஆயினும் அவர்களும் நபியவர்களை நிராகரித்து துன்புருத்துகின்றனர். இந்நிலையில் மதீனாவைச் சேர்ந்த ஒரு குழுவினர் அகபா என்ற இடத்தில் நபியவர்களை சந்தித்து இஸ்லாத்தை ஏற்கின்றனர். இதன் பின்னணியில் நபயவர்கள் முஸ்லிம்களை மதினாவுக்குச் செல்லுமாறு கட்டளையிடுகிறார்கள். நபியவர்கள் மதினா செல்லும் வழியில் அவரை கொலை செய்து விட திர்மானித்து மக்காவாசிகள் முயற்சிக்கின்றனர். ஆனால் அவர்களது முயற்சிகள் யாவும் படுதோல்வியைச் சந்திக்கின்றன. மதினா சென்றதும் நபியவர்கள் பள்ளிவாயலொன்றை அமைக்கிறார்கள். நபியவர்களது இந்த வளர்ச்சியை தாங்க முடியாத இறைநிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களின் சொத்துக்களை ஆக்கிரமிக்க முயன்ற போது அதனை தடுத்து போரிட அல்லாஹ் அனுமதி வழங்குகிறான். இந்தப்பின்னணியில் முஸ்லிம்கள் குறைஷியரின் வணிகக் குழுவொன்றை இலக்காகக் கொண்டு பத்ர் என்ற இடத்திற்குச் செல்கின்றனர். அங்கு மக்கா படையுடன் போரிட வேண்டிய நிலையேற்படுகிறது. இப்போரில் சில முக்கிய மக்கத்துத் தலைவர்கள் கொலை செய்யப்படுகின்றனர். இப்போரில் தனது தந்தையை கொலை செய்த ஹம்ஸாவை பலி தீர்ப்பதாக ஹிந்த் சபதமேற்கிறார். மற்றுமொரு போருக்கு தனது கணவர் அபூசுப்யானைத் தூண்டுகிறார். இதனால் உஹத் போர் நடைபெறுகிறது. இப்போர் ஆரம்பத்தில்

[225]Freek L. Bakker, The Image of Muhammad in the Message, the First and only Feature Film about the Prophet of Islam, Reseach Gate, Vol. 17, No. 1, 77–92, January 2006, pp. 77

முஸ்லிம்களுக்கு சாதகமாக இருந்தாலும் காலித் பின் வலீதினால் கைநளுவிப் போகிறது. இப்போரில் ஹம்ஸாவை வஹ்ஷி என்பவர் கொலை செய்ய ஹிந்த் அவரது ஈரலை வெளியில் எடுத்து கடித்துத் துப்பி பலிதீர்க்கிறார். சில காலம் கடந்து, நபியவர்கள் மக்கா சென்று உம்ரா செய்ய விரும்புகிறார்கள். அப்போது மக்கா குறைஷியரின் கட்டுப்பாட்டில் இருந்ததால் அவர்கள் அவரைத் தடுக்கின்றனர். இதனால் இருசாராருக்குமிடையில் பத்தாண்டுகள் போர் புரிவதில்லையென்ற உடன்படிக்கை செய்யப்படுகின்றது. இக்காலப்பகுதியில் மதினாவைச் சுழ இருந்த பல பகுதிகளுக்கு நபியவர்கள் இஸ்லாத்தின் செய்தியை தனது தூதுவர்கள் மூலம் அனுப்புகிறார்கள். இதனால் கவரப்பட்ட காலித் பின் வலீத் மற்றும் அம்ரிப்னுல் ஆஸ் ஆகியோர் மதினா வந்து இஸ்லாத்தை ஏற்கின்றனர். ஏலவே, செய்யப்பட்ட ஹுதைபிய்யா உடன்படிக்கையை சில மக்கத்து இளைஞர்கள் மீறுகின்றனர். ஆயினும், அதற்கான வருத்தத்தைக் கூறவும் உடன்படிக்கையை தொடரவும் அபூசுப்யான் மதினா வருகின்றார். நபியவர்கள் அதனை மறுக்கிறார்கள். மக்காவுக்கெதிராக போருக்கு தயாராகிறார்கள். நபியவர்களை நேரில் சந்தித்தது அபூசுப்யானில் பாதிப்பை ஏற்படுத்த அவர் இஸ்லாத்தை எற்கிறார். மறுநாள், முஸ்லிம்கள் மக்காவுக்குள் தக்பீர் கூறியவர்களாக நுழைந்தனர். தொடர்ந்து இத்திரைப்படம், நபியவர்கள் இறுதி ஹஜ்ஜின் போது ஆற்றிய முக்கிய உரையின் பகுதிகளுடன் முடிகிறது.

**05) அர்ரிஸாலா திரைப்படத்தில் உருவகப்படுத்தல்**

உருவகப்படுத்தல் காரணமாக அக்காதின் அர்ரிஸாலா திரைப்படம் பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டியேற்பட்டது. ஆனால், இத்தகு சவால் என்பது அர்ரிஸாலாவுக்கு மட்டுமே நேர்ந்த ஓன்று அல்ல. இஸ்லாமிய வரலாற்றை திரைப்படமாக்க சினிமா கலைஞர்கள் முயன்ற போதெல்லாம் இப்பிரச்சினை தலை தூக்கியது. “இயக்குனரும் நடிகருமான யூசுப் வஹ்பா திரைப்படத்தில் தான் நபிகளாரின் பாத்திரத்தினையேற்று நடிக்க விரும்புவதாக அறிவித்த போது அதற்கெதிராக 1927 இல் அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள் கிளர்ந்தெழுந்தனர்.”[226]

அர்ரிஸாலா சமய மற்றும் அரசியல் ரீதியான சவால்களை சந்திக்க வேணடியேற்பட்டது. “1976 ஜுலை 29 இல் இஸ்லாத்தின் ஸ்தாபகர் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றிய ஒரேயொரு முழு நீளப்படத்தில் முதல் காட்சி இலண்டனில் திரையிடப்பட்டது. இப்படத்திற்கு இரண்டு பெயர்கள்: இறைத்தூதர் முஹம்மத், செய்தி (Muhammad, Messenger of God and The Message) முதலாவது நிஜப்பெயர். ஆயினும் இது அறிஞர்களால் நிராகரிக்கப்பட்டது. எனவே, வேறொரு பெயர் (செய்தி) வழங்கப்பட்டது.”[227] இந்த

[226]Freek L. Bakker, The Image of Muhammad in the Message, the First and only Feature Film about the Prophet of Islam, Reseach Gate, Vol. 17, No. 1, 77–92, January 2006, pp. 78
[227]மேலது, பக்: 77

சவால்களை பேட்டியொன்றில் அக்காத் அர்த்தபூர்வமான வார்த்தையில் “சமய மற்றும் பிக்ஹ்சார் கஸ்டங்கள் தவிர வேறெதையுமே நாம் புரிந்து கொள்ளக்கூடிய அர்த்தத்தில் எதிர்கொள்ளவில்லை.”[228] என்று கூறுகின்றார்.

“1974 இல் தயாரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, முஸ்லிம் அறிஞர்கள் தங்களது சிந்தனையை மாற்றிக் கொண்டார்கள். முழு தயாரிப்புச் செயற்பாடுகளையும் எதிர்த்தனர். இதற்கிடையில் மக்காவையொத்த பிரமாண்டமான செட்டும் மொரோக்கோவில் அமைக்கப்பட்டது. மிகவும் யதார்த்தமாக அமைக்கப்பட்ட இந்த மக்கா செட் புனிதமிகு மக்கமா நகருக்கு வரும் உண்மையான யாத்திரிகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தி தவறுதலாக அந்த போலி மக்காவுக்குச் செல்ல நேரிடும் என்ற காரணத்தைப் பயன்படுத்தி படத்தயாரிப்பாளர்களை வேளியேற்றுமாறு சவூதி மன்னர் பைஸல் மொரோக்கோ மன்னர் இரண்டாம் ஹஸனுக்கு அழுத்தம் கொடுத்தார். படப்பிடிப்பு நடாத்த ஒரு செட்டோ, நாடோ இல்லாத நிலையில் அக்காத் லிபிய ஆட்சியாளர் கடாபியின் பக்கம் திரும்பினார். கடாபி இந்தப் படத்திற்கு அனுசரணை வழங்க ஆர்வமாக இருந்தார். தனது நாட்டில் படப்பிடிப்புக்கான இடங்களை வழங்கினார்.”[229]

இத்தகைய சவால்களைச் கவனமாகவும் நிதானமாகவும் அக்காத் எதிர்கொண்டார். சர்ச்சைகள் எழா வண்ணம் சில இராஜதந்திர அணுகுமுறைகளை கையாண்டார். இப்படத்திற்கு ஆரம்பமாக ஷரீஆ அனுமதியைப் பெற முயற்சித்து வெற்றியும் கண்டார். “ஏலவே எந்தவொரு திரைப்படத்தையும் தயாரித்திராத அமேரிக்காவில் வசிக்கும் சிரிய பிரஜையான தயாரிப்பாளர், இயக்குனர் முஸ்தபா அக்காத் (பி.1935) திரைக்கதையின் ஒவ்வொரு பக்கத்தையும் அனுமதிக்குமாறு கெய்ரோ அல்-அஸ்ஹர் பல்கலைக்கழக அறிஞர்கள் சிலரிடம் கேட்டுக்கொண்டார்.”[230]

சினிமா என்பது காட்சியூடகம். அதன் சிறப்பம்சமே குறியீடுகளுக்கூடாக கதை சொல்வதாகும். ஒரு சிறந்த இயக்கனரினால் எப்படிப்பட்ட கதையையும் இலகுவாக சொல்லி முடிக்க முடியும். இதனை பல காத்திரமான இயக்குனர்களின் படைப்பக்களில் காண முடிகிறது. சத்யஜித்ரே போன்வர்கள் இதில் ஜாம்பவான்கள். இயக்குனர் அக்காதும் தான் எதிர் கொண்ட சவால்களைச் சமாளிக்க இந்த முறையைப் பின்பற்றினார். அர்ரிஸாலாவில் பல இடங்களில் இதனைக் காண முடியும். “அக்காத் கண்டுபிடித்த தீர்வு, நபிகள் (ஸல்) அவர்கள் திரையில் எங்குமே தோன்ற மாட்டார்கள். அவர்களது தடி மற்றும் ஒட்டகம் மட்டுமே காட்டப்படும். அக்காத் நபிகளாரின் சிறிய தந்தை ஹம்ஸா (ரழி) மீதே படத்தை கவனம் செலுத்தச் செய்தார்.”[231] இவ்வாறே, “அல்-அஸ்ஹர் பல்கலைக்கழக அறிஞர்கள் நபிகளாரை மட்டுமல்ல அவர்களது மனைவிமார், மருமகன் அலி (ரழி) உள்ளடங்களாக பிள்ளைகள் ஆகியோரையும்

[228] அல்-மஜல்லா- இணைய சஞ்சிகை, 2020 ஜுலை 02 இல் மீள்பிரசுரிக்கப்பட்ட முஸ்தபா அக்காதுடனான பேட்டி, https://arb.majalla.com

[229] Freek L. Bakker, The Image of Muhammad in the Message, the First and only Feature Film about the Prophet of Islam, Reseach Gate, Vol. 17, No. 1, 77–92, January 2006, pp. 78

[230] மேலது, பக்: 78

[231] மேலது, பக்: 78

காட்சியாக சித்தரிப்பதை தடைசெய்தனர். எனவே, பத்ர் போருக்கு முந்திய ஒற்றைப் போரில் ஒரு வீரராக அலி (ரழி) சண்டையிடும் போது அவரது வாள் மட்டுமே காட்சிப்படுத்தப்படும்."[232] அத்துடன், பல இடங்களில் கெமரா மொழிக்கூடாக Panning, Point of view, Tilt up and down, Over voice போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

இத்தகைய தொழில்நுட்ப தந்திரோபாயங்கள் அக்காதுக்கு வெற்றியளித்தன. அவரால் தான் எதிர்பார்த்ததையடைய முடிந்தது. நெதர்லாந்து, உட்ரெக்ட் பல்கலைக்கழக பேராசிரியர் பிரீக். எல். பேக்கர் தனது ஆய்வொன்றில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்: "இந்தக் கட்டுப்பாடுகளின் விளைவுகள் தொலை நோக்குடையவை. ஆனாலும், திரையில் பார்க்கவோ கேட்கவோ முடியாத முஹம்மத் (ஸல்) அவர்களின் சித்தரிப்பு படம் (முழுவதும்) ஆதிக்கம் செலுத்துகிறது. இத்தனைக்கும் நபிகளாரின் பேச்சு கேட்கப்படுவது (சினிமாவில்) தடை செய்யப்பட்டுள்ளதற்கிணங்க (உரையாடல்களை பேச அவர் சார்பான) பேச்சாளர்களை படத்தயாரிப்பாளர்கள் பயன்படுத்த வேண்டியிருந்தது."[233] தனது திரைப்படத்தின் வெற்றி குறித்து கூறும்போது அக்காத், "இன்று இத்திரைப்படம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகுவதைக் காண்கிறீர்கள். அதை எதிர்த்தவர்களே தமது நண்பர்களுக்கும் அதனை காட்சிப்படுத்துமாறு கேட்கின்றனர்."[234]

அதேவேளை, இப்படத்தின் காட்சியமைப்பிலும் திரைக்கதையிலும் பல இடங்கள் உண்மையான வரலாற்றுக்கு முரண்படுவதாக விமர்சனமும் முன்வைக்கப்படுகிறது. "முஸ்லிம் வரலாற்று மரபுக்கு படம் எந்தளவு நம்பகத்தன்மை கொண்டது என்பது கவனிக்கத்தக்கது. ஆயினும், கலைசார் கட்டுப்பாடுகள் சில தவறுகளை தவிர்க்க முடியாததாக்கிவிடும். உதாரணமாக பத்ர் போரில், முஸ்லிம் படை வீரர்கள் ஹம்ஸாவினால் வழிநடாத்தப்படுவதாக (திரைப்படத்தின் மூலம்) பார்வையாளர்கள் தோற்றத்தைப் பெறுகின்றனர். அதேசமயம், முஸ்லிம் மரபின் பிரதான மூலங்களில் ஒன்றான இப்னு இஸ்ஹாக்கின் ஸீரத்துர்ரஸுலில்லாஹ் (அல்லாஹ்வின் தூதரின் வாழ்க்கைச் சரிதை) என்ற நூலில் முஹம்மத் (ஸல்) அவர்களே தளபதியாக இருந்தார்கள் என வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது."[235] இது பொதுப்புத்தியில் நபிகளார் தொடர்பான பிழையான சிந்தனைப் போக்கினை பதிவு செய்யத்தவறவில்லை.

**முடிவுரை (CONCLUSION)**

ஆற்றுகைக் கலை என்ற வகையில் அறேபிய சினிமாவின் வளர்ச்சி இன்று அறபு நாடுகளை அதிகளவில் பாதிக்கின்றது. அறேபிய சினிமா தனக்கேயுரிய தனித்துவமான பண்புகளுடன் வளர்ச்சியடைந்துள்ளது. தொழில்நுட்பத்தில் மேற்கத்தைய சினிமாவுக்கு நிகராகவும்

---

232 மேலது, பக்: 79
233 மேலது, பக்: 81
234 அல்-மஜல்லா- இணைய சஞ்சிகை, 2020 ஜுலை 02 இல் மீள்பிரசுரிக்கப்பட்ட முஸ்தபா அக்காதுடனான பேட்டி, https://arb.majalla.com
235 Freek L. Bakker, The Image of Muhammad in the Message, the First and only Feature Film about the Prophet of Islam, Reseach Gate, Vol. 17, No. 1, 77–92, January 2006, pp. 81

அதேவேளை உள்ளடக்கத்தில் தனித்துவத்துடனும் முன்னேறியுள்ளது. சினிமாவின் மூலம், தமது கலாசார, நாகரிக அம்சங்களை வெளிப்படுத்த அறேபிய இயக்குனர்கள் தவறவில்லை. அவர்கள் தாம் எதிர்கொண்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் மிகச் சிறந்த படைப்புக்களை தந்துள்ளனர். அனுமதி வரையறுக்கப்பட்ட நிலையிலும் நபிகள் நாயகம் பற்றிய திரைக்கதையை தொழிநுட்ப யுக்திகளைக் கையாண்டு முஸ்தபா அக்காத் படமாக்கியுள்ளார். திரையிலல்ல, பார்வையாளனை நிஜக் கதைக்குள் கொண்டு செல்லும் ஆற்றலை இப்படம் கொண்டிருக்கின்றது. ஆயினும், வரலாற்று நம்பகத்தன்மையை அவரால் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. அறேபிய இலக்கியத்தின் மிகப்பலமானதொரு விடிவம் என்ற வகையில் இது தொடர்பான பரந்த ஆய்வுடன் கூடிய விழிப்புணர்வினை அறபு மொழி கற்பிக்கும் நிறுவனங்கள், கல்விக் கூடங்கள் எதிர்காலத்தில் மாணவர் மத்தியில் ஏற்படுத்தி திறனாய்வினை வலுவூட்டும் கலைத்திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் மாற்று சினிமா தொடர்பான வழிகாட்டல் மற்றும் பயிற்சிகளை வழங்க வேண்டுமென்றும் இவ்வாய்வு பிரேரிக்கின்றது.

**உசாத்துணைப் பட்டியல் (REFERENCES)**


Patrick Keating (2014), Cinematography, New Brunswick: Rutgers University Press.

முகைதீன் ஹஸன், (2019) “அறேபிய இலக்கியத்தில் கதை கூறலும் சினிமாவும்”, மருதோன்றி - பிரதேச கலாசார விழா சிறப்பு மலர் - 08, ஓட்டமவடி: கலாசாரப்பேரவை, கோறளைப்பற்று மேற்கு.

விஸ்வாமித்திரன் (2008), “டுனீஷிய சினிமா” குருதியில் படிந்த மானுடம் சமகால அரசியல் திரைப்படங்கள், சென்னை: தோழமை வெளியீடு, முதற்பதிப்பு.

Freek L. Bakker, The Image of Muhammad in the Message, the First and only Feature Film about the Prophet of Islam, Reseach Gate, Vol. 17, No. 1, 77–92, January 2006.

அப்துர்ரஹ்மான் பின் ச.்.து அத்தஸ்ரி, ஹுக்முத் தம்தீலிஸ் ஸஹாபா வல் அன்பியா - முன்னுரை, (2012) முதல் பதிப்பு, www.alukah.net

கலாநிதி அப்துல் காதிர் முஹம்மத் அஹ்மத் கமர், தம்ஸீலு அத்வாரில் அன்பியா வஸ்ஸஹாபா பில் அப்லாமி வல்முஸல்ஸலாத், சர்வதேச மாநாட்டு அறிக்கை, ஜித்தா: மஜ்மவுல் பிக்ஹில் இஸ்லாமி, www.noor-book.com

கலாநிதி ஷௌகி இப்ராஹீம் அல்லாம், பத்வா செயலகம், தாருல் இப்தா அல்மிஸ்ரிய்யா, எகிப்து: https://www.dar-alifta.org/ar/ViewFatwa.aspx?ID=13236&LangID=1

அமாலியா ராஹன்தி, முஸ்தபா அக்காதின் அர்ரிஸாலா திரைப்படம் - உள்ளடக்க ஆக்கபூர்வத்தன்மை தொடர்பான ஆய்வு, (2010), சரீப் ஹிதாயத்துல்லாஹ் அரச பல்கலைக்கழகம், ஜகர்த்தா, இந்தோனேசியா.

அல்-மஜல்லா- இணைய சஞ்சிகை, 2020 ஜுலை 02 இல் மீள்பிரசுரிக்கப்பட்ட முஸ்தபா அக்காதுடனான பேட்டி, https://arb.majalla.com

விகிபீடியா, முஸ்தபா அக்காத் (08.10.2020 அன்று கீழ்வரும் இணைப்பில் பெறப்பட்டது.) https://ar.wikipedia.org/wiki/%D9%

அரகீக், முஸ்தபா அக்காத் யார்? (08.10.2020 அன்று கீழ்வரும் இணைப்பில் பெறப்பட்டது.) https://www.arageek.com/bio/moustapha-akkad

12.10.2020 அன்று கீழ்வரும் இணைப்பில் பெறப்பட்டது http://www.elementsofcinema.com/general/what-is-cinema.html